REGD No M 4042

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 6—4—52 | இதழ் 40

## ஐந்துலட்சம் :: :: ஐயா!

"வாங்குவாருண்டோ!" என்று ...டவில்லை; பத்திரிகைகளில் விளம்...ம் செய்தனர். திரும்பிப் பார்க்க...ல்லைஎவரும். கலக்கத்தோடு பார்த்...னர்—'ஐந்து லட்சம் ரூபா, சார்! ...ப்படியே கிடக்குது!' என்று ...ங்கலாய்த்தனர். அவர்கள் கலக்...ம் காண, கேலிஎழும்பிற்று பலருக்...கு. 'ஐந்து லட்சம் போட்டுவாங்கி...னர்களாம்—இன்று விற்க விருப்பு...கிறார்கள்—எவரும் விருப்பவில்லை ...வாங்கிய லட்சணத்தைப் பார்த்...தாயோ?' என்று பலப் பலக் கூறி, ...பரிகாசம் செய்தனர், மக்கள்.

விலை போகாத "அதை" வாங்...கியவருள் ஒருவர் குறிப்பிட்டார். 'விளம்பரம் செய்தோம் பலனில்லை; ...லம் போட்டால் என்ன?"

"ஏலமா?"

"ஆமாம். வேறு வழி...!"

ஐந்து லட்சத்தை விழுங்கிய "அது" துருப்பிடித்துக் கிடந்தது. அதைப் பராமரிக்கவும், துடைத்து வைக்கவும், 'எண்ணெய் போடவு...மாக—செலவு வேறு ஆகிக்கொண்...டிருந்தது. ஆகவே, ஏலம் போட ...முன் வந்தனர்.

"ஐந்து லட்சம் போட்டு வாங்கி...யது—அருமையான பெயர் கொண்...டது—ஒரு தரம்.........இரண்டு ...தரம்......" என்று கூவப்பட்டது ...லத்துக்கு. எவரும் கேட்கவில்லை. ...வியர்வையையும் வேதனையையும் ...சமாளித்துக் கொண்டு கூவினர்.

ஒருவர் முன் வந்தார்—சந்தோ...ஷத்தோடு பார்த்தனர். அவர் ...கேட்டார் — "ரூபாய் முப்பது ஆயி...ரம்!"

ஐந்து லட்சமாச்சே என்றனர், விலை கூறியவர்கள் 'ஆனால் என்ன—முப்பதாயிரம் தான் பொறும்—அதுக்கு மேல் எனக்கு வேண்டாம்' என்று அவரும் போய்விட்டார்

எங்கே நடந்தது, இது என்று புரிந்துகொண்டிருக்கலாம் — மாட்சிமை தங்கிய காங்கிரஸ் மகானுபாவர்களைத் தாங்கிய சென்னை மாகாணத்திலேதான், இத்திருக் காட்சி நடைபெற்றது.

ஏலம் போட்டவர்கள் காங்கிரஸ் மந்திரிமார்கள். ஏலம் போடப்பட்ட பொருள் அனுமான் — ராம தூதனின் சிலையல்ல, விமானத்துக்கு இவர்கள் விரும்பி வைத்த பெயர்—விமானம் 'அனுமான்' இந்த இடத்தில் உருவானதல்ல; யாரோ வெளிநாட்டார் செய்தது—ஆனாலும் பக்தி சிரத்தையோடு பெயர் சூட்டி தூப தீபம் காட்டித்தான், 'வெள்ளோட்டம்' நடத்தினர். அந்த அனுமான் சந்தி சிரித்திருக்கிறது! அய்யங்கார் சுவாமிகளோ ஆச்சார்ய பீடங்களோ 'அனுமா'னுக் கேற்பட்ட அவமானத்தைப் போக்க முன் வந்ததாகத் தெரியவில்லை — விற்காமல் கிடந்தது—கஜானாப் பணத்தைத் தின்றுகொண்டே கிடந்தது!

பரிதாபகரமான அனுமானைப் பற்றி, பழைய சட்ட சபையின் கடைசி நாளில் பல உறுப்பினர்கள், கேள்விகள் கேட்டிருக்கிறார்கள். அப்போது காங்கிரஸ் மந்திரியார் கனம் சீதாராம ரெட்டி அனுமானைப் பற்றிய விவரங்களைத் தந்திருக்கிறார்—

'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு' என்பதைப்போல சென்னையிடம் இருந்தது இந்த ஒரு விமானம்தானும் அடிக்கடி டில்லிசெலவும் அவசியம் ஏற்படுகிறதல்லவா—அதற்காக 1948ல் வாங்கப்பட்டதாம். வாங்கியபிறகு மூன்றாண்டுகளில் மூன்றே மூன்று முறைதான் இந்த விமானம் டில்லிக்குப் பறந்ததாம்—அப்படியானால் சென்னை மந்திரிகள் போகவில்லையோ என்று நினைப்பீர்கள். போனார்கள் பலப்பல தடவைகள்! இந்த விமானம் 'ஷெட்டில்' கிடக்க, வேறு விமானங்களுக்கு காசு போட்டு 'டிக்கெட்' வாங்கிக் கொண்டு போனார்கள்! காசு—கஜானாவிலிருந்து எடுத்துக்கொண்டது!

பிரயோஜனப்படாத விமானம் சும்மா இருந்ததா? — இல்லை! — சுமார் 2½ லட்சத்தைத் தின்றிருக்கிறது!! 2½ லட்சம் அனுமானின் பராமரிப்புக்காகச் செலவிடப்பட்டதாம் — ஏழைப்பங்காள காங்கிரஸ் அமைச்சர் அறிவிக்கிறார்.

இவ்வளவு செலவு செய்த விமானத்தைத்தான், எவரும் வாங்க வரவில்லை—ஏலத்துக்குக் கூவியும் கேட்பாரில்லை—கேட்ட ஒருவரும் 'கிண்டல்' செய்துபோயிருக்கிறார்.

* * *

"சரி அப்பா? இப்போது என்ன

வாயிற்று — அனுமான்!'' என்று கேட்பீர்கள். அதைத்தான் ராஜமன்னூர் என்பவர் சட்டசபையில் கேட்டிருக்கிறார். அதற்கு காங்கிரஸ் அமைச்சர் பதில் கூறியிருக்கிறார்.

'ஐந்துலட்சத்துக்குமேல்செலவு செய்திருக்கிறோம். விற்க முயன்றோம் — முடியவில்லை: ஏலம் கூவினோம்—கேட்பாரில்லை. என்னசெய்வது? இனாமாகக் கொடுத்துவிட்டோம்!''

இனாம் கொடுத்துவிட்டார்களாம்! சென்னை மாகாணத்து கஜானாவிலிருந்து ஐந்துலட்சத்தைக் கொட்டி வாங்கிய இந்த ஆகாயவிமானத்தை இனாம்தந்துவிட்டார்களாம். இனாம்!—யாருக்கு? டில்லிக்கு!! கூறுகிறார், அமைச்சர், கும்பி கொதிக்க அலறிக்கிடக்கும் மக்கள் நம்பிய காங்கிரஸ் அமைச்சர் கூறுகிறார்! கலக்கம் எதுவுமின்றி கூறுகிறார்!! டில்லி பாதுகாப்பு இலாகாவுக்கு இனாமாக அளித்துவிட்டார்களாம்!

அமைச்சரின் இந்தப் பதிலைக் கேட்ட நண்பர் அப்துல் மஜீது ஆத்திரத்தோடு கேட்டிருக்கிறார்:

"உங்களது தமாஷாவுக்காக சர்க்காருக்கேற்பட்ட இந்த நஷ்டத்தை யார்தலையில் கட்டப்போகிறீர்கள்:''

இதைத் தொடர்ந்து பல உறுப்பினர்கள், காங்கிரஸ் அமைச்சரை, கேள்விகள் கேட்டிருக்கிறார்கள்—காங்கிரஸ் உறுப்பினர்களே கேட்டிருக்கிறார்கள்.

ராஜமன்னூர்:— புராணத்தொடர்பு கொண்ட 'அனுமான்' என்கிற பெயரை இந்த விமானத்துக்கு வைக்கக் காரணம் என்ன?

பட்டாபிராமய்யா;— இந்த 'உதவாக்கரை விமானத்தை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டதா?

லிங்கராஜு:— இந்த விமானத்தை வைத்துக் கொள்வதற்காக இந்திய சர்க்காருக்கு ஏதாவது பணம் தரப்போகிறதா, சென்னை!?

கோபாலசாமி:— இந்த 'நன்கொடை' விமானத்தை இந்திய பாதுகாப்பு இலாகா உபயோகிக்கப் போகிறதா—அல்லது மியூசியத்தில் வைக்கப் போகிறதா?

கேலி! கிண்டல்!!—இத்தனைக்கும் காங்கிரஸ் அமைச்சர் திணறித் திணறி பதில் சொல்லியிருக்கிறார்— 'இல்லை! ஆமாம்!' என்ற வார்த்தைகளைக்கொண்டு.

கடைசியாக நண்பர் ரஸாகான் கேட்டிருக்கிறார்:

"இந்த விமானத்தால் இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதே. இத்தொகையை சம்மந்தப்பட்ட மந்திரிகளிடமிருந்து வசூலிக்கப் போகிறீர்கள்?''

வசூலிக்கப் போவதில்லை!—என்று ரத்னச் சுருக்கமாகப்பதில் கூறிவிட்டார், அமைச்சர். எப்படி வசூலிப்பார்கள்!—இந்தத் தைரியத்தால் தானே மக்களுடைவரிப்பணத்தை

இப்படியெல்லாம் கொட்டியளா
ருக்கிறார்கள்—ஏழைகள் நாட
ராயலசீமைபஞ்சமாம்! பட்டினிய
சாகிறார்களாம்! பாருங்கள், நம
காங்கிரஸ் ஆட்சியின்கைங்கரிய
தை—ஐந்துலட்சம் ஐயா, ஐந்
லட்சம்! வீண்—வீண்! யாருடை
பணம் இது? எவர்தரும்வரி இ
இவர்கள் மந்திரிமார்கள்—இதற்கு
பெயர் அரசாங்கம்—இதுபோன்
காரியங்களைச் செய்வோர் 'தியா
கள்': வெட்கக்கேடு!

❀

# வெற்றிலை குடியானவர் தொல்லை

[இரா. சகந்நாதன்]

பாண்டமங்கலம் பொத்தனூர், புதுபாளையம், வேலூர், சேலம் மாவட்டத்தில் இருக்கின்றன. மேற்படியூர்களில் ஏறத்தாழ ஐம்பதாயிரம் மக்களுக்குமேல் (கொடிக்காலில்) வெற்றிலைத் தோட்டத்தில் வேலை செய்து வருகிறார்கள், இந்த ஊர்களில் உற்பத்தியாகும் வெற்றிலையை அந்த ஊர் ஏஜண்டுகளின் மூலம் சங்ககிரி சேட்டுகளுக்கு அனுப்பி, சேட்டுகள் கொடுக்கும் பணத்தைக்கொண்டு, உள்ளூர் ஏஜண்டுகள், பணத்தை குடியானவர்களுக்கு கொடுப்பது உண்டு. ஆனால் அடிக்கடி சங்ககிரியிலிருக்கும் சேட்டுகள் தாம் முதலில் சொல்லிய விலையின்படி கணக்கு தீர்ப்பது இல்லை. உதாரணமாக ஒரு ஏஜண்டு ஒரு வாரத்தில், ஒரு சேட்டிற்கு பத்தாயிரம் ரூபாய் (சரக்கு) வெற்றிலை போட்டால் அந்த சேட்டிடம், அந்த ஏஜண்ட் பாக்கி வசூலிக்கச்சென்றால் முதலில் 6 ஆயிரம் அல்லது 7 ஆயிரம்ரூபாய்கொடுத்துவிட்டு, மீதி அடுத்த வாரம் தருகிறேன் என்று சொல்லி சரக்குப் போடும்படி கேட்பது. இவர்களும் அதன்படி அவர்களுக்கு சரக்குப் போடுவது. பணம் வசூல் செய்யப் போனால் பழைய பாக்கியில் (1000) ஆயிரம் ரூபாய்தான் தரமுடியும் கணக்கு நேர் செய்து கொடுஎன்று சொல்லி, ஏஜண்டைக் கேட்பார், கள். ஏஜண்டும், விட்டுக் கொடுத்துவிட்டு ஊர்வந்து குடியானவர்களிடம் பணத்தை குறைத்துத்தருவது

இப்படியாக நீண்டகாலமாக நடந்
வருவதால் குடியானவர்கள் மிகவு
தொல்லைக்கு ஆளாகி அவதிப்ப
கிறார்கள். சென்ற வாரம்வரை இந்
மூன்று ஊர்களின் பாக்கி சங்கிரி
சேட்டிடம் (375000) ரூபா
மூன்றேமுக்கால் லட்சம் இரு
கிறது. இந்தத் தொகையைக் கே
டால்'தள்ளிக்கொடு. சரக்குப்போடு
என்று கேட்கிறார்கள். இவற்றிற்
எல்லாம் ஆளாகியுள்ள குடியா
வர்கள் மிகவும் கடன்காரர்களா
ஆகி, சோற்றுக்கு திண்டாடுகிறா
கள். சேட்டுமார்களோ பணம் இ
வரை தந்தபாடில்லை. ஆதலா
பொத்தனூர்வெற்றிலை வியாபாரச
கத்தின் சார்பாக உள்ள முதன்ம
யாளர் சென்றவாரத்தில் சங்ககிரி
சென்று பாக்கிகளை சேட்டுமார்களி
டம் கேட்கும்பொழுது மேற்படிசே
ட்டுகளின்கையாட்கள் வசூல்செய்ய
வந்தவரை மிகவும் தாறுமாறாக
பேசி, கேவலப்படுத்தியிருக்கிறா
கள். இதைக் கேள்விப்பட்ட குடி
யானவர்கள் மிகவும் கோபப்பட்
சேட்டுகளுக்கு வெற்றிலை போட
கூடாது பழிக்குப்பழி வாங்கவேண்
டும்என்று ஆத்திரத்தோடுசங்ககிரி
செல்ல முற்பட்டார்கள். ஆனா
அதற்குள், பொத்தனூர் கிராமத்
தின் ஊராண்மைக் கழகத் தலைவ
அவர்கள் அறிந்து குடியானவ
களுக்கு சமாதானம் சொல்லி,வெ

11-ம் பக்கம் பார்க்க

# ஏனப்பா, முடியாது?

"எப்படியப்பா முடியும்?"—னத்தோடு கேட்பவர்களும், ச்சலோடு பார்ப்பவர்களும் இருக்ரர்கள். ஆந்திரத்தைக் காட்டியும் ன்னடத்தை உதாரணத்துக் ழைத்தும், கேரளத்தை சுட்டிக் ட்டியும் 'திராவிட நாடாவது! ருவதாவது—எப்படியப்பா முடிம்?' என்று கேட்கிறார்கள்.

இப்படிக் கேட்போரிலே, இருகம் உண்டு. ஒன்று, சந்தேகங்களை வர்த்தி செய்து கொள்ளும் சை கொண்டோர். மற்றொன்று, ம்மைப் பார்த்து வயிறெரிந்து ாய்க்கு வந்த வார்த்தைகளை வாரிறைக்கும் ரகம்.

இரண்டாவது ரகத்துக்குப் பதில் முனைவது பயன் படாத செயாகும். கொக்கு, கருப்பு என்போத் திருப்தி செய்யவா முடியும்—திரைக்கு மூன்று காலே என்பது ண்டா வாதம்தானே!

கேரளமும் ஆந்திரமும் தமிழகமும் கன்னடமும் சேர்ந்த கூட்டாட்சி அமைப்பதென்பதே நமது கோரிக்கையாகும்.

இந்தக் கூட்டாட்சிக்கான பிரதேசமாக சென்னை மாகாணத்தை ாம் குறிப்பிட்டு வருகிறோம். இத்கைய மாபெரும் நிலப்பரப்பு, கூட்டாட்சிக்குள் இருப்பதே பலனும் பயனும் தரமுடியுமென்பது நமது கருத்தாகும்.

இந்தக் கூட்டாட்சிக் கோரிக்கைக்கு நாம் காட்டும் முதல் காரணம்—இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களின் பண்டைய கலாச்சாரமும் அவர்தம் பழக்க வழக்கமும் தான். ஒரே இனம்! ஒரே மொழி பேசிய கூட்டம்! ஒரே நிலையில் வாழ்ந்திட்ட மக்கள்!—இந்த அடிப்படையை வைத்தே, நாட்டுப் பிரிவினை கோருகிறோம்.

"என்னப்பா இது! தமிழ் நாட்டிலிருந்துகொண்டு ஒரே இனம் என்று சொல்லிவிட்டால் போதுமா?"

"மலையாளத்தார் மனமிசைவாரா, ஆந்திரத்தார் அருகே வருவாரா, கன்னடத்தார் கை கொடுப்பாரா!"

"தனித் தனி மொழிகள், நீ குறிப்பிடும் பிரதேசத்தில் இருப்பதை அறியாயோ?"

என்று, இவ்வித கேள்விகளை எழுப்புகிறார்கள். உண்மைதான்—கேள்வி எழுப்புவோர் குறிப்பிடுவது போல அந்தந்த பிரதேசங்களில் நமது குரல் ஒலிக்கவில்லை—காரணங்கள் பல உண்டென்றாலும் ஒலிக்கவில்லை என்பது உண்மை.

நமது கழகத் தோழர்களில் சிலர், கேரளத்திலும், கன்னடத்திலும், ஆந்திரத்திலும் அடியெடுத்து வைக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் நமது எண்ணம் பரவிய அளவுக்கு அந்தந்த பிரதேசங்களில் பரவவில்லை.

பரவவில்லையே யொழிய நாம் கொண்டிருப்பதுபோல, இந்த மாநிலம் ஒரே அமைப்புக்குள் வாழவேண்டுமென்று ஆங்காங்கே உள்ளோர் விருப்புகிறார்கள்.

சென்னை மாகாணம், தனிச் சிறப்போடு இயங்கவேண்டும் — இந்த ஆசை கேரளத் தோழர்களிடத்திலும் ஆந்திர நண்பர்களிடமும் கன்னடம் பேசுவோர்களிடையிலும் இல்லாமலில்லை; இருக்கிறது.

மலையாளத்தார் மனமிசைவாரா, இசைந்தாலும் திருவாங்கூரும் கொச்சியும் இணைய விரும்புமா—தனி ராஜ்யமாச்சே, அது!—என்று, கேரளப் பிரதேசங் குறித்து, கூறுவோர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு தகவலை வைக்கவிரும்புகிறோம்.

"சென்னை ராஜ்யத்துடன் திருவாங்கூர் கொச்சி இணைக்கப்பட வேண்டும்"

நாமல்ல கூறுவது: கேரள சாமர்ஜம்! கடந்த 24ந் தேதி சென்னையிலே நடைபெற்ற மலையாளிகள் மாநாட்டிலே இப்படியொரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. மலையாளிகள் மாநாடு! தலைமை வகித்தவர் டாக்டர் சி. ஆர். கிருஷ்ண பிள்ளை!!

இத் தீர்மானம் ஏன் கொண்டு வரப் பட்டிருக்கிறது தெரியுமோ?

"பொருளாதாரத்திலும், கலாச்சாரத் துறையிலும், சமுதாய ரீதியிலும் முன்னேற இதுவே வழி தரும்"

இது, ஏது?—சென்னையோடு திருவாங்கூர் கொச்சி இணைந்து வாழ்வது! இதனால் பலன்? சமுதாய முன்னேற்றம்—பொருளாதார அபிவிருத்தி—கலாச்சார முற்போக்கு மலையாளிகள் மாநாடு கூறுகிறது இப்படி!

திராவிட நாடு பெற நாம் என்ன கூறுகிறோம்—திராவிட சமுதாயம் முன்னேற; திராவிட நாடு பொருளியல் வாழ்வு பெற; திராவிடக் கலாச்சாரம் சிறப்புற்று விளங்க.

மலையாளிகள் மாநாடு கூறுவதற்கும் நாம் சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறதா! இல்லை யென்றால் எப்படி, இக்கருத்து, அங்கே எழும்பிற்று—நமதுகுரல் ஒலிக்கவில்லை மாநாடுநடைபெற்ற கோகலே மண்டபத்தில்; ஆனால் எண்ணம் முரசொலித்திருக்கிறது! எவ்விதம் ஏற்பட்டது இது!

நாம், எதுகைகூடினால் உண்மையான சுகவாழ்வு மலருமோ அதைப் பெறவிரும்புகிறோம். ஆகவே, அந்த உண்மை, அவர்கள் உள்ளத்திலும் எழும்பியிருக்கிறது.

* * *

"இதென்னப்பா, ஆரியமும் திராவிடமும்!"

"மலையாளிகளும் தெலுங்கரும் கன்னடியரும் திராவிட இனமாமே!"

"ஏதோ சொல்கிறார்கள்!"

"ஆரியம் திராவிடம் பேதத்தை எப்படிக் காட்ட முடியும்?"

இதுபோல, வேறு சிலர் கேட்கிறார்கள் இனவாரி அடிப்படையில் தனி நாடு கோருவதைக் கேட்டு, இவர்களுடைய கருத்தெல்லாம். 'எங்கேயிருக்கிறது ஆரியமும் திரா

விடமும் அதுதான் கலந்துவிட்டதே ஒன்றாக' என்பதாகும்.

இந்தக்கலப்பு எங்கேயிருக்கிறது? இருந்தால் அக்ரகாரம் ஏற்பட்டிருக்குமா—அங்கே இன்னார்தான் இருக்கவேண்டும் என்கிற நியதி உண்டாகியிருக்குமா—பேசும் மொழியிலே 'ஆத்துக்கு' 'போக்கு' 'நோக்கு' புறப்பட்டிருக்குமா—முஞ்சி முறை வளருமா—வைதிகப் பாசம் நிலைத்து நீடிக்குமா!

ஆரியக் கலாச்சாரத்துக்கும் திராவிடக்கலாச்சாரத்துக்குமுள்ள வேற்றுமைகளைக் கண்கூடாகக் காண்கிறோம்—இன்றும்! 1952–லும்!!

பேதங்களும் கலாச்சார வேற்றுமைகளும் அதிகமாகத் தென்படுகின்றன. திராவிட இனம் தனது மொழியைப் பேசுகிறது! அதுவே தமது தாய்மொழி என்று கூறுகிறது. வந்த இனமோ, 'சம்ஸ்கிருதம்' தனது தாய்பாஷை என்று சொல்கிறது — அதுவே மேலான பாஷை என்று பெருமை பேசுகிறது.

தமிழகத்தில் மட்டுமல்ல பிற பிரதேசங்களிலும், இரண்டு கலாச்சாரத்துக்குமுள்ள, பேதங்கள் இன்னும் நிலவிக்கொண்டுதான் உள்ளன. அங்கங்கும் பார்ப்பனர்களே, மேல்ஜாதிக் காரர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கீழேயிருக்கும் அத்தனை மக்களும்— அவர்தம் மொழிகளும்— திராவிடக் குழு மொழியாகத்தான் இருக்கின்றன. இந்நிலையில் ஏன் இந்த இனம் — தனி நாடு பெற்று, வாழக் கூடாது? வாழ்ந்ததே கிடையாதா! தமிழகமும் கேரளமும் கன்னடமும் தெலுங்கு பிரதேசமும், இணைந்து தழுவி, வாழ்ந்திருக்கின்றன. தென்னாட்டு சரித்திரத்தைப் பார்த்தால் பலப்பல தென்படும். இன்னும், ஆங்காங்கே சென்றால் இந்த உண்மையை அறிவிக்கும் சில சாசனங்களைக் காணலாம். இவ்வளவு ஒற்றுமை கொண்ட மாபெரும் இனம், ஒன்றாக ஏன் வாழமுடியாது! இவ்வளவு பேரும் ஒன்றாகிவிட்டால் தன்னிலை என்ன வாகும் என்று கலங்கும் ஆதிபத்ய வாதிகளைவிட எவர்தான் இதை எதிர்ப்பர்?

"தமிழ் நாட்டார் திராவிடம் என்று பேசுகிறார்கள். தமது ஆதிக்கத்துக்கீழ் ஆந்திர கேரள கன்னடப் பகுதிகளை கொண்டு வர விரும்புகிறார்கள். இதுதான் திராவிடநாடாம்"

"ஆந்திரர் ஆந்திரநாடு கேட்கிறார்களே, என்னப்பா செய்வீர்கள்?"

"மொழிவாரி மாகாணப் பிரிவினையன்றோ தேவை! இந்தக் கிளர்ச்சியைத் தாண்டி திராவிடநாட்டுப் பிரச்சினை வெற்றிபெற இயலுமோ?"

இப்படிச் சில கேள்விகள்—முக்கியமானவையும்கூட. இதற்கு தனது பதிலை திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய முதல் மாநாட்டின் மூலம் தெளிவாக்கியிருக்கின்றது: அத்தீர்மானம்:—

"தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய திராவிடக் குழு மொழிகள் வழங்கும் பகுதிகள் மொழிவழி தனி மாகாணங்களாகப் பிரிந்து சுய நிர்ணய அடிப்படையில் சுதந்திர சமதர்ம திராவிடக் குடியரசுக் கூட்டாட்சியாக உருவாக வேண்டும்"

அந்தந்த பகுதிகள் மொழிவாரியாகப் பிரிய வேண்டுமென்பதை நாம் மறுக்கவில்லை. அவையவை தமது மொழியின் மூலமாக ஆட்சி நடத்தவும், தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும், வேண்டுமென்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அப்படி பிரிந்த நான்கு பிரதேசங்களும், தமக்கோர் கூட்டாட்சி அமைத்துக் கொள்ள வேண்டுமென்கிறோம் — நான்கு காலணுக்கள் ஒரே இடத்திலிருக்கவேண்டும்—சிதறினால் ஒரு அணுவாக ஆகமுடியாது! மதிப்பாக வாழவும், பொது எதிரியை மடக்கவும், தனது பொருளாதார வாழ்வை நிலைநாட்டிக் கொள்ளவும் இந்தக் கூட்டாட்சி ஏற்பட வேண்டும் என்று நமது தீர்மானம் கூறுகிறது.

இந்தக் கூட்டாட்சி, சமதர்ம மணம்கமழ, விளங்குமென்று தெளிவுபடுத்தியுள்ளோம்.

★

"இந்திய சர்க்காரிலிருந்து பிரிந்து போகத்தானே விரும்புகிறீர்கள்?"

"ஆமாம்!"

"ஏன்?"

"டில்லி எங்களை வஞ்சிக்கிறது— எல்லாத் துறையிலும் மலைபோல வளர்ந்து எங்களைத் தாழ்த்து கிறது"

"இதுமட்டுந்தானா காரணம்?"

"இன்னும் பலப்பல உண்டு— இந்தியா ஒரு உபகண்டம். இங்கே பல இனத்தவர்கள் வாழ்கிறார்கள். அதிலே குறிப்பிடக்கூடிய இனம் எமது. இது ஒரு காலத்தில் சிறப்புற்று விளங்கியது..."

"சரி! சரி!! இதனால் திராவிட நாடு கேட்கிறாய் திராவிடக் கூட்டாட்சியில் ஒரு மத்தியசர்க்கார் நான்கு பிரதேசங்களையும் நிர்வகிக்க இருக்குமல்லவா?"

"இருக்கலாம்!"

"அப்போது என்ன அர்த்தம்?"

"விளங்கவில்லையே தாங்கள் கூறுவது!"

"ஒரு மத்தியசர்க்கார் வேண்டாமென்று கூறிவிட்டு மற்றோர் மத்திய சர்க்கார் ஏற்படுத்தப் போகிறீர்கள் இல்லையா?"

இப்படி, திசையைத் திருப்புவோரும் இருக்கிறார்கள். இப்போதிருப்பதற்கும் — நாம் கூறும் கூட்டாட்சிக்குமுள்ள வித்யாசங்கள் நிறைய இருக்கின்றன. இப்போது இருப்பது ஒரு சர்க்கஸ் கூடாரம்! மான், பசு, புலி, நரி — எல்லாம் அடைக்கப்பட்டிருக்கிறது!! ஆனால், நாம் கூறும் கூட்டாட்சி — தற்போதைய மத்ய சர்க்காரைப் போன்றதல்ல. தன்னோடிருக்கும் பிரதேசங்களைச் சுரண்டி, தான்மட்டும் கொழுப்பதல்ல! எல்லாப் பிரதேசங்களையும் தனது ஆதிக்கத்துக்குப் பணியவைத்து ஆட்டிப் படைப்பதல்ல! எல்லா அதிகாரங்களையும் பறித்துக்கொண்டு தன்னோடு இருப்பவைகளை, 'பிச்சைக்காரர்'களாக ஆக்குவதல்ல!

சகோதர கூட்டாட்சி — இரத்த பாசம் கொண்டது—பரஸ்பர கூட்டுறவு அடிப்படையில் கொண்டது. இத்தகைய திராவிடக் கூட்டாட்சி மலர்ந்தால்தான், இங்கே பரவிக்கிடக்கும், மாபெரும் இனம் ஐக்கியத்தோடு தனது சாதனைகளைப் பெறமுடியும். மலையாளிகள் மாநாட்டில் குறிப்பிட்டதுபோல, "பொருளாதார முன்னேற்றமும், கலாச்சார முற்போக்கும், சமுதாய ஒற்றுமையும் கொண்டு" விளங்க முடியும்.

✲

# மஜீத் குடும்ப பாதுகாப்பு நிதி

## தி. மு. க. பொதுச் செயலாளர் வேண்டுகோள்

அன்புடையீர்,

வணக்கம். தென் ஆற்காடு மாவட்டத்தில், தேர்தலில் காங்கிரசுக்கு எதிர்ப்பாகப் பணியாற்றிய வீர இளைஞர் மஜீத் எனும் தோழன் காங்கிரசுக்காரர் ஒருவரால் கொலை செய்யப்பட்ட செய்தி தாங்கள் அறிந்ததே.

தமிழ்நாடெங்கும் இந்தப் படுகொலையைக் கண்டித்து அறிக்கைகள் விடுத்தும், கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றியும், அனுதாபச் செய்தி அனுப்பியும், எல்லா முற்போக்குக் கழகங்களும், தங்கள் கடமையைச் செய்தன.

தென் ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த (உழைப்பாளர் கட்சி) M. L. A-க்களும் இது விஷயமாகத் தங்கள் கடமையைச் செய்து வருகிறார்கள்.

நெல்லிக்குப்பத்தில், தோழர் மஜீது குடும்ப பாதுகாப்பு நிதி திரட்டும் முயற்சிக்காக ஒரு தனிக் கமிட்டியும் அமைக்கப்பட்டிருக்கிறது.

பல நண்பர்கள் தனிப்பட்ட முறையிலே உதவிசெய்திருக்கிறார்கள்.

சில பொதுக் கூட்டங்களிலே உண்டியல் மூலம் சிறு தொகையும் வசூலாகி இருப்பதாக அறிகிறேன்.

தோழர் மஜீதின் குடும்பத்தினர் பரம ஏழைகள்.

பொதுநலப் பணிக்காகத் தன் மகன் பலியிடப்பட்ட செய்தி ஒரு புறமும் வறுமை மற்றோர்புறமும் தாக்க, மஜீதின் தந்தை தத்தளிப்பதாக அறிகிறேன்.

எனவே, "மஜீது குடும்ப பாதுகாப்பு நிதி" முயற்சியில், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் ஈடுபட்டு, உருவாக்கி, விரைவில், வெற்றி தேடித்தரக் கோருகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், 'மஜீது குடும்ப பாதுகாப்பு நிதி'க்காக அனுப்ப விரும்பும் உதவித் தொகையை, 'திராவிட நாடு' நிலையம், காஞ்சிபுரம், என்ற முகவரிக்கு 'மஜீது குடும்ப பாதுகாப்புநிதி' என்று குறிப்பிட்டு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் கூட்டங்களில் உண்டியல் வசூலிக்கப்பட்டால், அதனையும், இம்முறையிலே அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லிக்குப்பத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நிதிக் கமிட்டி, தென் ஆற்காடு மாவட்ட M. L. A-க்கள் ஆகியோரையும் கலந்துகொண்டு, 'சேரும் நிதி'யை அந்தக் குடும்பத்துக்குச் சேர்ப்பிக்கும் காரியத்தை மேற்கொள்ள இருக்கிறேன்.

இந்த என் வேண்டுகோளை அன்புடன் ஆதரித்து, விரைவில், என் எண்ணம் வெற்றிபெறச் செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

அன்பன்

**அண்ணாதுரை.**

## ராதாவுக்குத் தடை

கரூரில் நடைபெறவிருந்த நடிகவேள் எம். ஆர். ராதாவின் நாடகங்கள், நடைபெறவொட்டாமல், கடந்த 27ந்தேதியன்று தடைசெய்யப்பட்டதாக அறிகிறோம்.

மேற்படி தடையைவிதிய மாஜிஸ்டிரேட் மேற்படி நாடகங்கள் நடைபெற்றால் அமைதிக்குப் பங்கம் ஏற்படுமென்று குறிப்பிட்டுள்ளார்.

நண்பர் ராதா — மக்கள் மனங்கவர்ந்தவர். தினசரி அவரது நாடகம் நடக்காத இடமில்லை-ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஊராக அவரது நாடகசபையினர் தமது நாடகங்களை நடத்தி வருகிறார்கள். நடத்தி வருகிறார்களென்றால் 'நவாப்' கம்பெனிகள் போலல்ல, பெருமித வசூல்—அபாரமான கூட்டம்—எப்படியப்பா நடிக்கிறார்' என்றபாராட்டுதல்களோடு.

அந்த ஊர்களிலெல்லாம் ஏற்படாத அமைதிக்குப் பங்கம், கரூரில் மட்டும் எப்படி ஏற்படுமோ—விளங்கவில்லை. நாமும் தொடர்ந்து கவனித்து வருகிறோம். கரூரில்மட்டுமே அடிக்கடி ராதாவுக்கு தடை உத்திரவுகள் போடப்பட்டு—நாடகங்கள் நடத்தப்படாமல் தடுக்கப்படுகின்றன. நான்கைந்து முறைகள், இதுபோல நடைபெற்றிருக்குமெனக் கருதுகிறோம். ஒரு முறை நடத்த அனுமதிதந்து, அதனால் ஏற்பட்ட 'அமைதிக்குப்பங்கத்தால்'தான் இப்போதும் தடுக்கப்படுகிறது என்று கூறமுடியாது! ஏனெனில் தொடர்ந்து அங்குமட்டும் தடைகள் போடப்பட்டிருக்கின்றன!!

சிலருடைய சொந்த விருப்பு வெறுப்பு அன்றி வேறெதைக் காட்டமுடியும்இந்நடவடிக்கைக்கு?

ஆட்சியின் அம்புகள் இத்தகைய அடாபிடிச் செயலில் இறங்குவது காண உண்மையில் வருந்துகிறோம். மனித உரிமையை உதாசீனம் செய்வது பேராபத்தைத் தரும். இதை உணரவேண்டும், அதிகாரத்தால், இஷ்டம்போல உலவுவோர்.

★

திராவிடநாடு

காஞ்சி] 6—4—52 [ஞாயிறு

# ஆச்சாரியார் வருகிறார்!

★

ஆச்சாரியார் வருகிறார்! அரசோச்ச வருகிறார்! பதவிப் பட்டாடை உடுத்திக்கொண்டு, சட்டசபை உறுப்பினர்கள் சிலர் பாதந் தாங்க, சிலர் பல்லக்குத் தூக்க, வேறு சிலர் சாமரம் வீச, மற்றும் சிலர் 'அடைப்பம்' தாங்க, பவனிக்குத் தயாராகிறார்!

ஆமாம் — அலுத்துவிட்டேன், மிக மிக அலுத்துவிட்டேன்—அரசியலில் இனி நுழையேன், அரே ராமா! அரே கிருஷ்ணா! எனும் அருமைத் திருமந்திரங்களை உச்சரித்துக் கொண்டு உயிருக்குயிராக உள்ள பரம்பிரம்மத்தை கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பூட்டும் வண்ணம் எடுத்துரைத்து, இகத்திலே பரத்தைக்காண, உறுதி கொண்டுவிட்டேன், இனி பதவியின் பளபளப்பு, அதிகாரமயக்கம், எனும் 'மாயப் பிசாசுகள்' தீண்டிட விடமாட்டேன், பஜகோவிந்தம், பஜகோவிந்தம், என்று பாடிக் கொண்டிருந்தாரே, அதே ஆச்சாரியார் தான் வருகிறார்!

யானைமீது அம்பாரிகட்டி அதிலே வெல்வெட்டு மெத்தை அமைத்து, அதன் மீது அலங்காரமாகச் சாய்ந்துகொண்டு சென்ற 'மஹாராஜா', இத்தகைய போக போகாதிகள் வீண் மனமயக்கம், எம்மானைப் பெம்மானைக் காண வொட்டாது தடுக்கும் பாபக் கறைகள், எனவே, இவை வேண்டேன், இனி துளசி மாலை அணிவேன், திருவாய்மொழி படிப்பேன், திருநாமம் தரிப்பேன், தீர்த்த யாத்திரை செல்வேன், கைத்தாளமிடுவேன் வேறு வீண் வேலை ஏதும் செய்வேன் அல்லேன், என்று ஊரறிய உலகறிய, உரத்த குரலில் கூறிவிட்டு, அடுத்த நாளே, எருமை மீதமர்ந்து எருக்கஞ் செடி நிறைந்த காட்டைக் கடந்துசென்று இருப்பளவு சேறுள்ள இடத்திலே இறங்கி, இதுவும் ஒரு சேவை தான், என்று கூறினதாகக் கதை கட்டவும் கூசுவர் — ஆனால் கண்ணாலே காண்கிறோம், 'கனம்' ஆகிறார், இகலோகமே இலேசானது என்று கூறிக்கொண்டிருந்த ஆச்சாரியார்.

மதுவிலக்குப் பிரச்சாரத்தை. கேட்போர் மனம் தெளியும் வண்ணம் செய்துகொண்டிருக்கும்சொற்பொழிவாளன், மேலும் அருமையாக, மதுவால் விளையும் கேடுகளை எடுத்துக் கூறும் நோக்குடன், "பூபோட்ட கிளாசிலே போடப்பா இரண்டரை" — என்று கேட்டான், என்று நகைச்சுவைக்காகக்கூட எழுதயாரும் முயற்சிக்கமாட்டார்கள்—ஆனால், ஆச்சாரியார் இதோகிளம்புகிறார், சென்னையில் அரசோச்ச! வீழ்ச்சிதான்—எனினும், என்செய்வது, என்கிறார்! உடலிலேயோவலிவில்லை — உள்ளமோ, பாரமார்த்திகத்திலே பாய்ந்துவிட்டிருக்கிறது—எனினும், என் செய்வது, 'இவாளெல்லாம், அழைக்கிறபோது ஒப்புக்கொள்ளாமலிருக்கமுடியல்லே!" —என்று பேசுகிறார்.

அலுத்த ஆச்சாரியார் வருகிறார். ஆத்மார்த்தத் துறையிலே ஈடுபட்டுவிட்டேன் என்று அறிவித்துவிட்ட ஆச்சாரியார் வருகிறார்! பட்டம், பதவி, எனும் மோகம் தீண்ட முடியாத, உயர்நிலைக்குப் பயணமாகிறேன் என்று பஜகோவிந்தம் பாடிக்கொண்டிருந்த ஆச்சாரியார் வருகிறார்.

வருகிற ஆச்சாரியார், கொல்லைப் புறமாக வருகிறார்!

மக்களை ஆளவருகிறார், ஆள்பவர்களை மக்கள் தெரிந்தெடுத்தபோது, அவர்களிடம் வராதவர் இன்று மக்களை ஆளவருகிறார்!

ஆளும் கட்சி காங்கிரசாக இருக்கக்கூடாது என்று நாட்டு மக்கள் தீர்ப்பளித்தான பிறகு, காங்கிரசை ஆளுங்கட்சி ஆக்கும் 'ஆத்மார்த்த' வித்தை புரிய வருகிறார், ஆட்சி செய்து செய்து அலுத்துவிட்டேன் என்று கூறிய ஆச்சாரியார்.

நரியைப் பரியாக்கி, அப்பரிமீதமர்ந்து, புலிவேட்டை ஆடுவேன், என்று புகலாமல் புகன்றிடும் 'பூஜ்யர்' பாரீர் என்கிறார்கள், மேளதாளங்களும், குப்பை கூளங்களும்.

கல்கியைக்கூட ஏமாற்றிவிட் 'கனம்' ஆகிறார், சோலைச் சீம சண்முகத்திடம், 'குல்லூகபட் என்ற பட்டம் பெற்றவர்!

நடவாத காரியம், என்றார் ந யர் கல்கி—நடைபெறத்தான் ெ தது.

இந்த நாட்டிலே, எது ந பெறவில்லை!

கண்ணைப் பெயர்த்தெடு அப்பிய கண்ணப்பனுக்கு அரு பாலித்த முக்கண்ணன், தா புணர்ந்து தகப்பனைக் கொல் மாபாதகம் செய்த 'மறையவர் மாணிக்கத்தை' அருகம் புல்லி பசுக்களுக்கு அளித்து, பெ ருமையிலே குளித்து, எழு னடி சேர்வாய் என்று கூறினா —இந்த நாட்டிலே எதவும் ந பெறும்!!

திருமணம் இந்த எழிலரசிக்கு ஏற்ற மணாளனைக் காணோம், என் வீட்டார் விசாரத்துடன் இருக் வீதி வழியே செல்லும், விபூ ருத்ராட்சதாரி, செம்பொன் ஓடும் என் நோக்கில் வேறல் ஒன்றே, என்று சிந்துபாடியப இத் துடியிடையாளை யாரோ மணம் புரிவோம் — கவலை கொ ளற்க என்பார்—மங்களானிபவங் கூறுவர், மரமண்டையினர்!

எதுவும்நடைபெறும், நாடு இத எனவேதான், இதோ ஆச்சாரிய வருகிறார்.

அதிலும், சும்மாவா வருகிறார்!

வருக! வருக!—என்று அழை தனர் — உதட்டைப் பிரித்து தலையை அசைத்தார்.

ஐயனே வருக! அரசியல் நுட்ப உணர்ந்த மெய்யனே வருக! ஆப பாந்தவா வருக! அனாதரட்ச வருக! எம்மைச் சுற்றிலும் சூ வளி—எனவே வருக! என்றனர்— சொன்னார்களா!! — கெஞ்சினர்— கதறினர்—அதற்குப்பிறகே திரு செங்கோட்டுத் திருமுனி, திருவா மலர்ந்தருளினார், "அஞ்சற்க! அ பர்காள், அஞ்சற்க! இதோ புற படுகிறோம், கருப்புக் கண்ணாடி டன்" என்று.

ஏறத்தாழ, புன்னைமரத்தின் மீ மர்ந்து புல்லாங்குழல் ஊதும் கண் ணனை, சேலை இழந்த சேயிழையார் இருகரம் கூப்பி, கண்ணா! மண வண்ணா! சேலையைத் தாரீர் என்

கெஞ்சிட, மோகன முரளீதரன், தொழுதிடும் துடியிடைகளின், அகத்தின் அழகு முகத்திலே தெரிகிறதா என்பதைக் கூர்ந்து கவனித்த பிறகு, சேலையைத் தருகிற காட்சி—படம் உண்டல்லவா, 'பக்த சிரோமணிகளின் கிரஹங்களில்' — அந்தப் படம், எம்பெருமானின் லீலாவிநோதக் காட்சி—அதன் அரசியல் பதிப்பு இப்போது தியாகராய நகரில், ஆச்சாரியார் இல்லத்திலே!

ஆகஸ்ட்டுத் துரோகி ஆச்சாரியார் ஒழிக! என்று அண்டம் அதிர முழக்கமிட்ட வீராதிவீரர், விருதுநகர் தீரர், காமராஜர் உட்பட, சகலரும் கூடிநின்று, சாஷ்டாங்க தெண்டனிட்டு வருக!வருக! என்று கெஞ்சிக் கூத்தாடின பிறகு, துறவறத்தைத் துறந்து, தாளத்தைக் கல்கிக் காரியாலயத்திலே போட்டுவிட்டு, கவர்னர் கைலாகுக்குச் சென்றார், 'சனமாகும்' வேதாந்தி!!

பொது மக்களிடம் மார்தட்டிப் பேசினார்கள் நாங்கள் ஆளப்பிறந்தவர்கள் திறமையும் உடையவர்கள், மற்றையோரை மதியாதீர், ஆட்சி புரியும் அருகதை உடையோர் யாமே, எனவே எமக்கே ஓட் அளியுங்கள் என்று — தியாகராயநகர் சென்று, 'பவதிபிக்ஷாந் தேஹி,' ஆகிவிட்டனர்! ஆச்சாரியாரின் வாழ்நாளிலேயே, வெற்றிக்களை பரிபூரணமாகத் தாண்டவமாடிய வேளை அது.

கனக விசயருக்குச் சிலை அமைத்திடும் திருப்பணியில் ஈடுபடுகிறேன், என்று சேரன் செங்குட்டுவன் கூறி, கனக விசயரின் தலையிலே ஏற்றிக்கொண்டு வந்த 'கல்லை'. சிற்றுளி கொண்டு செதுக்கினான், என்று 'சிலப்பதிகாரம்' திருத்தி பதிப்பிக்கப்படுகிறது — செந்தமிழ் நாட்டவர்கள், சொரணையற்றுப் போனார்கள், என்று எண்ணிக் கொண்டிருக்கும் ஆணவக்காரருக்கு அரசியலிலே இடம் இன்னமும் இருப்பதால்!

ஆச்சாரியார் மகாமேதையாம்! இருக்கட்டுமே! அவரை அழைத்த நூற்றிஐம்பத்தி இரண்டு 'உருவங்களும்' தத்தமது மூளையைக் கூட்டிப் பார்த்தால் கூடவா, நாட்டை ஆளும் காரியத்துக்குப் போதுமானதாகப்படவில்லை. அவ்வளவு 'சூன்யங்கள், ஏன், பொது மக்களின் ஓட்டுகளைப் பறித்தன! திருமணமான பிறகா, மணமகன் கூறுவது, ஐயா, நான் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலி! என்று. களத்திலே நின்ற பிறகா, வாள்வீசிஅறியேன், என்று பேசுவது. சட்டசபை உறுப்பினர்களான பிறகா, வெட்கமின்றி கூறுவது, எங்களுக்குள் ஒருவர் தலைவராக முடியவில்லை, நாடாள நாங்கள் போதாது, எங்களிலே சிலர் நரிக்குணம் கொண்டவர்உளர், சிலர் புலிக்குணம் கொண்டவர் உளர், ஆனால் அவர்போன்றார் இங்கு இல்லை, அவரிடம் இருகுணமும் இணைந்திருக்கிறது, என்று பேசுவது.

அலுத்துப் போயிருக்கும் ஆச்சாரியார், அரசியல் விவகாரங்களுக்கு அப்பாற்பட்டவராகி, இன்னிறத்தான் இவ்வண்ணத்தான் என்று சாமான்யர்களால் கண்டு கொள்ள முடியாதவரான கடவுளின் திவ்ய சொரூபத்தை மனக்கண்ணால் காணவேண்டுமென்ற 'ஞானநிலை'யை நாடிச் சென்று கொண்டிருப்பதாகக் கூறப்பட்ட ஆச்சாரியார், அழைக்கப்பட்டு வருகிறார்! வருகிறபோதே, தன் பொறுப்புகளையும் பாரங்களையும் தாங்கும் நிலை, உடலில், உள்ளத்தில், இருப்பதாகவாவது கூறுகிறாரா என்றால் அதுவும் இல்லை தத்தி நடக்கிறேன்—முதுமை—சோர்வு—என்று கூறிக்கொண்டு வருகிறார். என்ன அதன் பொருள்? ஏன் இதைக் கூறுகிறார்! ஏற்க இருக்கும் பெரியதோர் பொறுப்புக்குத் தேவையான திருக்கலியாண குணங்களா இவை? இல்லை! எனினும் பன்னிப் பன்னிக் கூறும் நோக்கம் என்ன?

உருக வைக்கிறாராம், தோழர்களே!

பாபம்! இவ்வளவு தள்ளாத காலத்தில், நிம்மதியாக, ராமா, கிருஷ்ணா, கோவிந்தா என்று மனனம் செய்துகொண்டு இருக்கவேண்டிய காலத்தில், எவ்வளவோ நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் பாடுபட்டு பாடுபட்டு எலும்புக் கூடாகி விட்ட இந்த முதியவரை, பெரிய தொல்லை மிகுந்த பொறுப்பை ஏற்கச் சொல்கிறோம், — இந்த நிலையிலும், தன் வயோதிகம், அலுப்பு, எதையும் பொருட்படுத்தாமல் சென்னை ராஜ்யத்தின் நல்மைக்காகத் தம்மை அர்ப்பணிக்க முன் வந்துள்ளார், என்னே அவரது தியாக சுபாவம், எத்தனை நிஷ்காம கர்மீயம், என்றெல்லாம் எண்ணுவார்களாம், தன் உரை கேட்பவர்கள்!

சிலர் இதுபோல எண்ணவுங் கூடும்!

சிலர், இப்போதே இதைச் சுட்டிக் காட்டியும் பேசுகின்றனர்.

நாம், வேறொன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

"இதற்கு மேல் துரிதமாகப் போக எனக்கு உடம்பில் சக்தி இல்லை. நான் இன்னமும் வேகமாகப் போகவேண்டுமென்று நினைத்தால் கூட சரீரம் இதற்கு மேல் இடம்கொடுக்கவில்லை. என்னுடைய 25வது வயதில் இ பதவியை நான் ஏற்றிருந்தால் என்ன செய்திருப்பேன் என்று சொல்ல முடியாது. ஆனால் 58வது வயதில் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். இப்போது எனக்கு வயது 60 ஆய்விட்டது" என்று கனம் முதலமைச்சர் சென்னை கொத்தவால்சாவடி கிடங்கின் மீது ஏறிக்கொண்டு பேசினார்.

புளுகு! புளுகு! ஆச்சாரியார் கொத்தவால்சாவடிப் பக்கமே வரவில்லை—என்று கூறிச் சீறத்தோன்றும் காங்கிரஸ் நண்பர்களுக்கு. பற்ற நண்பர்களும் கூட, இப்படி ஒரு கூட்டம் நடைபெற்றதாகச் செய்தியே வரவில்லையே, ஏன் இதுபோல இல்லாததை எழுதுவது என்றே கேட்கத் துடிப்பர்.

பேசியவர் ஆச்சாரியார் தான்—உறுதி கூறுகிறோம் — கூட்டம் நடைபெற்றதும் கொத்தவால்சாவடியில்தான், நிச்சயமாகக் கூறுகிறோம்—வயதாகிவிட்டது எனவே தான் வல்லமையுடன் பணியாற்ற இயலவில்லை, என்றுதான் கூறினார். அதுவும் உண்மை—ஆனால் பேசியது, இப்போதல்ல, 1939ம் ஆண்டு ஜூலை மாதம் 2ந் தேதி!!

ஆச்சாரியார், இப்போது நான் வயோதிகன்—ஆகவே அதிகமாகப் பணியாற்ற இயலாது என்று பேசுகிறாரே, இது புதிய பேச்சல்ல அவருடைய பழைய பல்லவி—1939லேயே, சென்னை முதலமைச்சராக இருந்த போதே, அவருடைய ஆட்சியிலே ஏற்பட்ட அவதிகளைக் கண்டு அல்லல்பட்ட மக்கள் ஆயாசப் பட்டபோதே, அவர், நான்

கிழவன், என்ன செய்யலாம், என்று தான் பேசினர். அப்போது துவக்கிய பேச்சு—இப்போதும் அவருக்குப் பயன் படுகிறது.

தள்ளாத காலத்திலே, ஏன் பாபம், இந்தப் பொல்லாத வேலை—தாங்க முடியாத தொல்லை.

காங்கிரசின்போரால் உள்ளே நுழைந்திருப்பவர்களிலே, வாலிபமுடுக்குக்கும் வயோதிகத் தளர்ச்சிக்கும் இடையே உள்ள பருவத்தினர், திறத்தினர், ஒருவருமே கிடையாதா! அவ்வளவு பஞ்சமா! செச்சே! வெளியே சொன்னால் வெட்கக்கேடு! வேற்று நாட்டவர் கேட்டாலும் கைகொட்டிச் சிரிப்பர்! ஏன்! நூற்றிஐம்பத்து இரண்டுகளின், இல்லங்களிலே உள்ள பெண்டு பிள்ளைகள் கூடக் கேலி பேசுமே!

காளைகள்—கர்ஜனைபுரியும் சிங்கங்கள் — என்றெல்லாம் ஓட்டர்கள் முன்பு சித்தரிக்கப்பட்டவர்கள், இன்று, எம்மால் ஆகாது என்று கூறி, துணைக்கு — துணைக்கா! — தலைமைக்கு, ஒரு முதியவரை, அழைப்பது, அவர் வருகிறபோதே நான் வயோதிகன் என்று பசப்புவது—இதுவா அரசியல்—ஜனநாயகம் — எந்தவகையான ஜனநாயகமோ நாம் அறியோம்.

மன்னிக்கவேண்டும்—ஜனநாயகம் என்ற புனிதமான பதத்தை, இந்த நிலைமையிலே எடுத்து எழுதியதற்காக.

ஜனநாயகம், தெள்ளத் தெளிய, எந்த எதைக் கூறுகிறதோ. அவைகளுக்கு நேர்மாறாகவே, கூடிய மாற்றிவரும் கூட்டத்தின் பிடியிலே நாடு சிக்கிச் சீரழிந்து வருகிற இந்த நாளிலே, ஜனநாயக முறையிலே இந்தக் காரியம் நடைபெறுகிறதா என்று, எண்ணிப் பார்க்கத் தொடங்குவதுதான், தவறு.

ஜனநாயகம், கூறுகிறது, அகில உலகிலும் உள்ள அறிவாளர் ஏற்றுக்கொண்டுள்ளனர், ஒரு கட்சிக்கு, சட்டசபையிலே 'மெஜாரடி' கிடைக்காவிட்டால், அந்தக் கட்சிக்கு நாடாள உரிமை கிடையாது என்று.

இதோ, மக்கள் கூறிவிட்டனர், காங்கிரசாட்சி வேண்டாம் என்று.

375-உறுப்பினர்கொண்ட சட்டசபையில் 152-பேர்மட்டுமே, காங்கிரஸ்! ஜனநாயகம் காங்கிரசுக்கு ஆளும் உரிமையைத் தரவில்லை. அரசியல் நாணயம், ஆட்சிக்குக் காங்கிரசுக்கு உரிமை இல்லை என்றே கூறுகிறது. —ஆயினும் என்ன — காங்கிரசல்லவா மந்திரிசபை அமைக்கிறது! முறைதானா!— என்று கேட்பீர்கள்! கேட்பர் மக்கள்—கேட்கட்டுமே—கேள்வி கேட்கும் மக்கள் கிளம்பினால், ஆட்சிபுரிய கேளாக்காதினரை, (ஆச்சாரியாருக்குக் காது கேளாது) நியமிக்கிறேன் என்கிறார் இந்தியஹிட்லர்!

சிறுபான்மையினருக்கு ஆட்சி உரிமை!

இதற்குத்தலைமை, அலுத்துப் போன கிழவர்.

இவர், வருவதும், கொல்லைப் புறமாக!

எவ்வளவு இலட்சணமான துவக்கம்—எவ்வளவு விரைவிலே அழிவதற்கு!!

கவர்னருக்கு, அறிவிக்கப்பட்டது, ஐக்யமுன்னணியில் காங்கிரஸ் கட்சியிலே இருப்பதைவிட, அதிகம்பேர் உள்ளனர் என்று. கருப்புக் கிளைவ். இதையா கவனிப்பார்! அவர், அனுப்பப்பட்டது இதற்கா! 'பழிபாவம்' ஏற்படுமோ, என்ற பயம் போக வேண்டுமென்று தான் அவர், இங்கே வந்தவுடனே அவசர அவசரமாக ராமேஸ்வரம் சென்று, 'ஒரு முழுக்கும்' போட்டு விட்டு வந்துவிட்டாரே! இனி என்ன அச்சம்! அழைத்தார் ஆச்சாரியாரை! கொல்லைக்கதவு திறந்திருக்கிறது, மெள்ள நுழையுங்கள், என்றார்—அதுவும் சரி, என்று கூறினார்—ஆச்சாரியார் வருகிறார்!

வருவதற்கு முன்பு, ஒரு வார்த்தை நேருவைக் கேட்டுப் பாருங்கள், என்றாராம். தூதவர்கள் சென்று கேட்டனர் — நேரு, சரி என்றாராம்! இவரும் உள்ளே நுழைந்துவிட்டார். நுழையுமுன்பு ஒருவிநாடி அவருக்கு நேருவின்மீது கோபம் பிறந்திருக்கும் — அமெரிக்கா—சீனா—ரஷியா—இங்கிலாந்து, — இப்படி ஏதேனும் ஓர் சீமைக்கு விசேஷ தூதராக அனுப்பக் கூடாதா, நாம் அந்தக் காரியம் எதற்கும் தேவையில்லை, என்று, நேரு எண்ணிவிட்டாரே—என்று சோகித்திருப்பார்.

ஆச்சாரியாரின், அனுபவ … முதுமை, இவைகளைக் கவனித்… அவருக்கு ஓர் உயரிடம் தரவே… டும் என்று நேரு எண்ணியி… தால், அவரை குடிஅரசுக்குத் த… வராக அல்லவா இருக்குமா… அழைத்திருக்கவேண்டும். ஆச்சா… யார், பாவம், பஜகோவிந்தம் பாடி… படி இருக்கிறார்; நேருவோ, பா… ராஜேந்திரபிரசாத்தைத் தலைவா… இருக்க அழைக்கிறார். இந்… கோபம், கொல்லைப்புற நுழைவா… இருந்தால்கூடப் பரவாயில்லை என்… அளவுக்கு, ஆச்சாரியார் உள்ள… திலே ஒருவிதமான நிஷ்காம கா… யத்தைக் கிளறி இருக்கக் கூடும்.

ஜனநாயகத்தைப் பற்றி… நினைப்பை நீக்கிவிட்டே, இன்… இத்தகைய காரியங்கள் நடை… பெற்று வருகின்றன,

மக்களால் விரட்டி அடிக்க… பட்டவர்களைக் கவர்னர்களாக்… கிறார், நேரு, துணிவுடன் — மக்… ளின் முகத்திலே காரித் துப்… கிறார் — ஜனநாயகத்தைத் துச்… மென்று தூக்கி எறிகிறார்!!

நாடு, எதிர்பார்த்தது, ஜனநாய… முறைப்படி இங்கு ஐக்ய முன்னணி… ஆட்சிக்கு வரும், என்று.

நூற்றுக்கணக்கிலே, நடைபெற்… பொதுக்கூட்டங்களிலே, முற்போ… குக் கட்சிகள் பலகூடி ஐக்கிய முன்… னணி ஆட்சியே வேண்டும் என்… இலட்சக்கணக்கிலே மக்கள் தீர்ம… னித்தனர்.

அந்த முன்னணி ஒரு வேலை… திட்டத்தையும், பலமுறை கூடி… விரிவாக விவாதித்துத் தயாரித்தது…

கள்ளமார்க்கட்டுக்காரரு… கொள்ளை இலாபமடிப்போனும்… மதஆதிக்கக்காரனும், இலஞ்ச இல… வணக்காரனும், நடுங்கிக்கொண்டி… ருந்தனர்.

இவர்களை எல்லாம்விட அதி… மான அச்சம், டில்லி தேவன்… களுக்கு ஏற்பட்டது.

கம்யூனிஸ்டு கட்சிக்கும் மற்… முற்போக்குக் கட்சிகளுக்கு… இடையே தோழமை ஏற்பா… கொண்டுவருவது கண்டு, அமெரி… காவின் பிடியிலேஉள்ள டில்லி அ… சத்தால் தாக்கப்பட்டது.

திராவிடநாடு பிரச்சினைக்குப்ப… பலம், பலவழிகளாலும் பலதிக்…

...லிருந்தும், திரள்வதும், இந்த ...லம், ஐக்கியமுன்னணி ஆட்சியில் ...லுவடையும் என்பதும் .வடநாட்டு ...யாபாரக் கோமான் களுக்குத் ...தரிந்தது—திகில் பிறந்தது.

எனவே, ஜனநாயகத்தைக் குழி ...தாண்டிப்புதைக்க அனுபவமிக்க ...ரு காங்கிரஸ்காரரைக், கவர்னராக் ...னர் — அவர் ஆச்சாரியாரைத் ...ணைக்கு அழைத்துக்கொண்டார்!

ஆச்சாரியார், வருகிறார், இனி, ...அரசியல் நெருக்கடி இராது, என்கி ...றார்கள் அடிவருடிகள். அதன் ...பொருள் இதுதான். மக்களின் ...விரோதிகளுக்கு, உயிர்ப் பிச்சை ...தருகிறோம், என்கிறது பாசீசம்.

ஆச்சாரியார், தலைமையை ஏற் ...றுக்கொண்டதும், வியாபார உலகு ...ரிப்பும் நம்பிக்கையும் கொண்டது —என்று செய்தி, எல்லா இதழ்களி ...லும், வெளிவந்ததன், பொருளும் இதுதான்.

எனவே; ஆச்சாரியார் வருகிறார், ...என்றால் முற்போக்கு இயக்கங்களை ...நொறுக்க அடக்குமுறை வருகிறது ...என்றுதான் பொருள்.

அதிலே ஆச்சாரியார் அபாரமான ...திறமைகொண்டவருங்கூட.

தாய்மார்களை எல்லாம், கைக் ...குழந்தைகளுடன், இந்தி எதிர்ப் ...பின்போது, சிறையில் தள்ளிய ...ஈரநெஞ்சினர், வருகிறார்!

தாலமுத்து, நடராஜனைப் பிண ...மாக்கித்தந்தவர், வருகிறார்.

பெரியாரை பெல்லாரி சிறையிலே ...தள்ளி, பெல்லாரியின் கடுமையான ...உஷ்ணம் உடம்புக்கு நல்லது என்று ...சட்டசபையிலே கேலிபேசிய, கண் ...ணியர், வருகிறார்.

கிரிமினல் சீர்திருத்த சட்டத்தை ...உபயோகிப்பது முறையா, என்று ...கேட்டதற்கு, கையில் கிடைத்த ...தைக்கொண்டு அடிப்பேன், என்று ...மிரட்டிப்பேசிய 'மேதை' வருகிறார்.

சட்டசபையிலே எதிர்க் கட்சி ...யின் சார்பிலே கூறப்படும், வாதங் ...களைத் துளியாவது கவனிக்கலா ...காதா என்று கேட்டால், எனக்கு ...ஒருகாது கேளாக்காது, அதைத் ...தான் அந்தப்பக்கம் திருப்புகிறேன் ...என்று நையாண்டி பேசியவர், வரு ...கிறார்!

குட்டிகதைகள் கூறி, மக்களி டையே குழப்ப மனதைக்கிளறும், புராணிகர் வருகிறார்.

தொழிலாளர் இயக்கத்தைத் தாக்குவதிலே, திறமைமிக்கவர் வரு கிறார்.

வைதீகர்களே, என்சதை என் இரத்தம், என்று பாசத்தோடு அழைத்த 'பூஜாரி' வருகிறார்!

பாகிஸ்தானைப் பலமாகக் கண் டித்த சூரர், வருகிறார்.

நாட்டுக்காக, சொல்லொணுக் கஷ்டநஷ்டத்தைப் புன்னகையு டன் ஏற்ற, சுபாஷ்சந்திரபோஸை, 'ஓட்டைப்படகு' என்று கேலி பேசிய உத்தமர் வருகிறார்.

சமதர்மத் தோழர்களின் பிரச் சாரத்தைக் கண்டு கோபங்கொண்டு சோறுக்கில்லாதார் பிரச்சாரம்' என்று ஜார்மொழி பேசிய சீலர் வருகிறார்.

அடக்குமுறையை வீசத் தெரிந் தவர், பாமரரை மயக்கும் வித்தை அறிந்தவர், பக்தி வேடமணிந்து மூடத்தனத்தை வளர்க்கும் ஆழ மான உள்ளம் படைத்தவர், ஆள வருகிறார்.

அச்சமூட்டுவதாக அல்லவா இருக்கிறது, என்று எண்ணுவீர் கள், இல்லை, இல்லை. மேலும், கவனி யுங்கள்.

ஆகஸ்ட் இயக்கத்திலே கலந்து கொள்ள மறுத்து, கலந்துகொண்ட காங்கிரசாரையும். கேலி பேசியவர், ஆச்சாரியார்.

அதன் பயனாக, சென்றவிடமெல் லாம் வெறுப்பைக்கண்டு, விரண்ட வர் ஆச்சாரியார்.

காமராஜரிடம், கைவரிசை காட்டி, கலங்கிக் கதறி, கல்கி புதிய இதழ் துவக்கியும் பயன்காணாது, பாரத காலட்சேபம் செய்யப்போகி றேன் என்று, கூறி; மூக்காடிட்டு ஏகிய, முதியவர், ஆச்சாரியார்.

கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு, பயன் படுமா என்ற சபலம்கொண்டு பொன்மலை ரயில்வே தொழிலாளர் மாநாட்டிலே கலந்து கொண்டு, 'பொது உடைமை' பேசியவர், ஆச்சாரியார்.

ஆந்திரப் பிரிவினைக்கு அடியிலே பள்ளம் வெட்டி, அது தெரிந்த ஆந்திரர்கள், அவரைக்கண்ட இடத் திலெல்லாம் கடுமொழி பேசிட, தனி

கலங்கி ஓடி ஒளிந்த வீரர், வரு கிறார்.

ஜனுப் ஜின்னாவின் ஒப்பற்ற அறி வாற்றலின் முன்பு; எதிர்ப்புகள் சரிவதுகண்டு, காங்கிரஸ் தீர்மானிப் பதற்கு முன்பே, பாகிஸ்தான் கொடுக்கத்தான் வேண்டும் என்று கூறி, லீகுக்கு, 'பீஸ்வாங்காத' வக் கீலாக வேலைபார்த்தவர் ஆச்சாரி யார்.

வீம்புடனும்வீறாப்புடனும் இந்தி எதிர்ப்பாளர்களை ஏசி விட்டு, அவர் களின் சக்தி ஓங்கி வளரக் கண்டு, புற்றிலிருந்து ஈசல்கிளம்புவது போலக்கிளம்புகிறார்களே என்று புலம்பியவர், ஆச்சாரியார்.

பதவிக்காலம் முடிய வீற்றிருக்க முடியாமல், பாதியிலே ஓடியவர் ஆச்சாரியார்!

அவர்தான் மீண்டும் வருகிறார்! தொட்டது துலங்காது — அவ ருடைய ஆற்றல் அது! கெஞ்சினால் மிஞ்சுவார், மிஞ்சினால் கெஞ்சுவார்— அவருடைய சுபாவம் அது.

திராவிடர்கள் மீது மோதி, அதன் 'சுகம்' கண்டவர் ஆச்சாரி யார்.

அவருடைய போக்கும் முறை யும், நமக்குப் புதியதுமல்ல, அவை

## இங்கே பாரீர்!

சேலம்
மார்ச் 28.

அரூர் தாலுக்கா தாசரல்லி போர்டு பாடசாலையில் வேலை செய்துவரும் தலைமை ஆசிரியர் ஏ. தீத்தான் என்பவர் காலில் செருப்பு அணிந்து வருகிறார் என்ற காரணத்தை முன்னிட்டு அவ்வூர் ஜாதி இந்துக்களில் சில ரால் 25—2—52 நடுப்பகல் 11-மணிக்கு பாடசாலைக்குள்ளேயே தாக்கப்பட்டாராம். இது சம்பந்த மாக, ஜில்லா போர்டு பிரசிடெண் டிற்கு ரிப்போர்டு செய்ததற்கு, 'நீரே வழக்கை நடத்திக் கொள் ளும் என' கூறிவிட்டாராம். அவ் வூரிலிருந்து மாறுதல் கேட்டதற் கும் நிர்வாகம் மறுத்துவிட்டதாம்.

இதுபற்றி வழக்கு சப்-மாஜிஸ்டி ரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப் பட்டிருந்தும் அது 19 3—52ல் தள்ளுபடி செய்யபபட்டுவிட்ட தாம்.

(ஜனசக்தி)

களைச் சமாளிப்பது நமது ஆற்றலுக்கு அப்பாற்பட்டதுமல்ல.

அவரும் நாமும் முன்பு ஒரு முறை களத்திலே சந்தித்திருக்கிறோம்—வடுக்கள் நமக்கு—தோல்வி அவருக்கு — இதனை அவருடைய அடிவருடிகள் அறியமாட்டார்கள்—அவர் மறுக்கமாட்டார்.

அப்போது, அவருக்கு இருந்த 'கட்சிபலம்' ஜெர்மன் ரீஷ்டாக்கில், ஹிட்லருக்கு இருந்ததுபோல! எல்லாம் கதர்மயம் ஜெகத்—அப்போது. இப்போது!! அவருடைய வாக்கியப்படி, 'விநாடிக்கு விநாடி வாழ்வுக்காகப் போராட வேண்டிய, நிலையில் காங்கிரஸ் கட்சி.

இன்று, ஆளவந்திருக்கும் காங்கிரஸ் கட்சி, பாங்கியில் பணம் இல்லாதவன் தரும் 'செக்' போன்றது.

ஐக்ய முன்னணிக்கு இனித்தான் வேலை மும்முரமாக இருக்கிறது. முற்போக்காளரின் கூட்டணிக்கு இனி மும்முரமாக வேலை இருக்கிறது.

ஜனநாயகம் சித்ரவதை செய்யப்பட்டதை, நாடு அறியச் செய்ய வேண்டிய பெரும் பணி இருக்கிறது.

மக்களுக்கு இழைக்கப்படும், அநீதியை, உலகு அறியச் செய்ய வேண்டும்.

அடக்குமுறைகளை ஆச்சாரியார் வீசத்தான் செய்வார் — தாங்கிக் கொள்ளும் சக்தி நமக்கு உண்டு, என்பதைத் தரணி அறியச் செய்ய வேண்டும்.

ஆச்சாரியார் ஆட்சியை ஒழித்துக் கட்ட, நம்மிடம் உள்ள ஆற்றலைத் திரட்டிக் காட்டவேண்டும்.

ஆச்சாரியார் வருகிறார், ஆண்மையாளர்களை அறைகூவி அழைக்கிறார்! ஓட்டளித்த பல இலட்சக் கணக்கான மக்களின் எண்ணத்தில் மண்ணைத் தூவிவிட்டு, ஆச்சாரியார் ஆட்சிப்பீடம் ஏறுகிறார்.

கொடுமைகளை அவிழ்த்துவிட, ஆச்சாரியார் தயங்கமாட்டார்! விழிப்புற்ற ஜனநாயகத்தைக் கண்டால் பாசிசம், பாய்ந்து கடிக்கத்தான் செய்யும்—ஆனால் அத்தகைய போராட்டங்களிலே, பாசிசம் வெற்றிபெற்றதாக, வரலாறு கூறவில்லை. பாசிசத்தை வெற்றிபெற விடமாட்டோம்.

அவர்கள் மிகப் பலர், நாம் மிகச் சிலர்—முன்பு!!

இப்போது, அவர்கள் மிகச் சிலர்—நாம் மிகப் பலர்! மக்கள், நமது முகாமில்!! நமது மனதினை யாருக்கும் நாம் அடகுவைத்துவிடவில்லை. நமக்கோ, நமது இயக்கத்தை நம்பிக்கொண்டிருக்கும் ஏழை மக்களுக்கோ, வாழ்வுக்கும் சாவுக்கும் வித்யாசம் கிடையாது. எனவே, ஆச்சாரியார் ஆட்சியிலே ஏற்படக் கூடிய, எத்தகைய அடக்குமுறைக்கும் நாம் யாரும் கலைத்துவிடப் போவதில்லை.

நாடு, நமது குரலைச் சரிவரக் கேட்கமுடியாதபடி தேசீய சந்தடி மிகுந்திருந்தபோதே, நாம் ஆச்சாரியாரை சந்தித்திருக்கிறோம்—உருகி உடல் கருகி உள்ளீரல்பற்றி எரியும் நோய் பிடித்த நிலையில் உள்ள காங்கிரசுக்குத் தலைமைபூண்டு இன்று வரும் ஆச்சாரியாரின் ஆட்சியை ஒழித்துக்கட்டுவது, முயன்றால், எளிதானதுதான்—சந்தேகம் வேண்டாம்.

ஆச்சாரியார் வருகிறார்—பஞ்சம் பரவுகிறது!

ஆச்சாரியார் வருகிறார் — கம்யூனிஸ்டு—முற்போக்காளர் கூட்டுறவு வளருகிறது!

ஆச்சாரியார் வருகிறார்—திராவிடனை எழுச்சி வீறுகொண்டு எழுகிறது.

ஆச்சாரியார் வருகிறார்—திராவிட நாடு திராவிடருக்கே ஆகப்போகிறது. எனவே, தயாராகுங்கள், இருள் கப்பிக்கொள்கிறது, விடிவெள்ளி காணப் போகிறீர்கள் என்று கூறுகிறோம். திராவிட முன்னேற்றக் கழகம், அக்ரமமான முறையிலே அமைக்கப்படும் ஆச்சாரியார் மந்திரிசபையை மக்களின் விரோதி என்றே தீர்மானிக்கிறது. இதனை மாற்றி அமைக்க, எந்த முற்போக்காளர் தீட்டும் திட்டமும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவைப் பெறும், என்று உறுதி கூறுகிறோம்.

நாடாள வருகிறார், ஆச்சாரியார்!

நாட்டினரே! திராவிடநாடு திராவிடருக்கே என்ற முழக்கம் திக்கெட்டும் கேட்கட்டும், கேளாக் காதையும் துளைத்துக்கொண்டு செல்லுமளவுக்கு, மககளின் எழுச்சிக்குரல் ஓங்கட்டும். வாழ்க ஜனநாயகம்! ஒழிக-பாசிசம்!

---


## SHORT TERM COURSES
### IN TECHNICAL LINE (VII-VIII)

Under the auspices of this Association the Vacational Courses in Automobile, Radio and Bacteriology will be conducted in the same way as in last year. Duration 4 to 6 weeks. Only Students of Intermediate (Mathematics, Physics and Science) and above will be admitted. No separate fees But Rs. 160/-to be paid in advance for consumption of materials and other charges, and Rs 140/- to be paid as caution and hostel deposits, the latter refundable after meeting the Hostel and other charges A vegetarian cosmopolitan boarding and lodging on dividing system available.

Rules are strict. Students will not be allowed to stay or go outside.

Applications with copies of health certificate, and particulars about height, weight and age and 3 copies of passport size photo (not returnable) must reach us before 10th April. If called for personal interview, they must be ready to join if selected, with deposits on 22nd April.

For few Lady students separate accommodation available No concession or exemption except for Lady students. No material charges will be made for Bacteriology.

Phone: 40
Telegram: GEDEE
Coimbatore,
25 3—52

G. D. NAIDU,
President.
Industrial Labour Welfare Association Ltd.
"GOPAL BAGH", COIMBATORE.

2-ம் பக்கத் தொடர்ச்சி

...லையை வெளியூர்களுக்கு அனுப்ப ...க்க ஏற்பாடு செய்ய முயற்சிக்கிறார் ...ள். இதனால் வெற்றிலை வெளியூர் ...களுக்கு போகவில்லை. வேலூரில் ...பெரிய கூட்டமாக கூடி மூன்று ...ஊர்களிலும் சென்று ஊர்வலம் ...வந்து, சேட்டிற்கு வெற்றிலைபோடு ...வதில்லை. ரொக்கப் பணத்திற்கு வெற்றிலை யடைப்போம் என்ற ஒலியைக்கிளப்பி இருக்கிறார்கள்.

வெற்றிலையை வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யும் கோட்டாமுறை சங்ககிரியிலிருக்கும் சேட்டுமார்களுக்கே இருந்து வருவதால் பொத்தனூர் முதலான ஊர்களில் உண்டாகும் வெற்றிலையை வெளியூர்களுக்கு அனுப்ப முடியாமல் சேட்டுமார்களின் வழியாக அனுப்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதால்தான் இந்த மூன்று லட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாய் பாக்கி. இதைக்கேட்க சென்றதற்கு மானக் குறைவும் தாக்குதலும் ஏற்பட்டு 2, 3, வாரங்களாக மக்கள் பணமுடையால், பஞ்சு படாத பாடு அடைந்து வருகிறார்கள். இதை அரசாங்கத்தார் உடனே மிக விரைவில் கவனித்து பாண்டமங்கலம், போத்தனூர் புதுப்பாளையம் வேலூர் ஆகிய ஊர்களில் உள்ள வெற்றிலை வியாபாரிகளுக்கு, ரயில்வே கோட்டா முறையை புகளூர் ரயில்வே ஸ்டேஷனில் (Pugalore Ry. Stn.) வெற்றிலைக் கூடைகளை வெளியூர்களுக்கு யார், எப்பொழுது எந்த இடத்திற்குப் கொண்டுபோகலாம் புக்கிங் செய்யலாம் என்ற முறை தரும்படி மிகவும் வேண்டிக்கொள்கிறார்கள். இங்கே ஐம்பதாயிரம் மக்கள் அவதிப்படுகிறார்கள். இதிலே சர்க்கார் தனது கடமையை செய்யத் தவறினால் கொடிய பஞ்சம் ஏற்பட்டுவிடும். வேலூரில் காவிரிக்குப்பாலம் ஏற்பட்டுவிட்டதால், வெளியூர்களுக்கு அனுப்பவும் வெற்றிலைக் கூடைகளை (Pugalore Ry) புகளூர் ஸ்டேஷன்களில் ஏற்றுமதிசெய்ய மிகவும் வசதி ஏற்பட்டு இருக்கிறது. இதை சர்க்கார் மிக மிக விரைவில் கவனித்து ஆவன செய்யுமா?

✿

# முடிந்தது

முடிந்துவிட்டது.

1952 மார்ச்சு 27ந்தேதியோடு, முடிந்துவிட்டது.

1946 மேமாதம் 24ந்தேதி, துவங்கிய சட்டசபைக் கூட்டம் முடிந்துவிட்டது.

ஆறு ஆண்டுகள், சென்னைசட்டசபை மண்டபத்திலே அமர்ந்திருந்தோர், இனி அங்கு செல்லமுடியாது. சென்றால் 'காலரி'தான் கிடைக்கும்.

வித விதமான கேள்விகள்! விசித்திரமான உருவங்கள்! — சென்னை சட்டசபை மண்டபத்திலே உலவினர்.

"தூங்கலாமா?"

"தூங்கலாம். ஆனால் குரட்டை விடக்கூடாது"

"ஆரஞ்சுப்பழம்சாப்பிடலாமா?"

"மூக்குப் பொடி போட்டால் என்ன?"

எந்த சட்ட சபையிலும் எழும்பாத, விநோதமான கேள்விகள் இங்கேதான் எழும்பின. மின்சார விசிறிக்குக்கீழ், இஷ்டம்போலத் தூங்கினர் சட்டசபை மெம்பர்கள் இங்கேதான் காணமுடிந்தது—இத் திருக்காட்சியை! சட்டசபை வராந்தாவிலே கடலையைக் கொரித்துக் கொண்டிருந்த'கனம்'களைக்காணும் 'பாக்கியம்' ஏற்பட்டதும் இங்குதான்! எத்தனையோ முறை சபாநாயகர் 'மணி அடித்து அடித்து உறுப்பினர்களைக் கூப்பிட நேர்ந்ததும் இங்குதான்! 'கோரம்' இல்லாததால் — கால்மணிநேரம், அரை மணி நேரம் கடந்து சபை ஆரம்பமான காட்சியையும் நமது சென்னையிலேதான் கண்டோம் அடிக்கடி!

இத் திருக்கல்யாண குணங்களோடு விளங்கிய பலர் 'மாஜி எம். எல். ஏக்கள்' ஆகிவிட்டனர். இனி, சட்டசபை மண்டபம் போனால், அவர்கள் 'காலரி கனவான்களாகத்தான்' இருக்கமுடியும் — 'கனம் M.L.A.'வாக வீறுப்போடு போக முடியாது!

பழைய சட்டசபை, முடிந்துவிட்டது.

அதிலே இருந்த பலர், மறுபடியும் போகமுயன்று, மூக்கறுபட்டனர்—மக்களை மதியாதகாரணத்தால்.

'பழையவர்'களிலே 29 உறுப்பினர்மட்டுமே, மறுபடியும் சட்டசபையில் அமரும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

'முடிந்துபோன சட்டசபையிலும்' சிலர் இல்லாமலில்லை — சிந்தனையும் செயலாற்றும் ஆசையும் கொண்டோர். ஆனால் அவர்களால் எதுவும் செய்யமுடியவில்லை 'காங்கிரஸ்' கூட்டத்துக்குமுன்.

அத்தகைய சட்டசபை முடிந்துவிட்டது.

★

# நம்பியாருக்கு மறுப்பு

மாஸ்கோவில் இந்தவாரம் நடைபெறவிருக்கும் பொருளாதார மாநாட்டுக்குச் செல்லவிருந்த தோழர் அனந்தநம்பியார் எம். பி. தடை செய்யப்பட்டார்.

டில்லி, அவரை ரஷ்யா போகாதவாறு தடுத்துவிட்டது. தொழிற் சங்கங்களின் சார்பில் மேற்படி மாநாட்டில் கலந்து கொள்ள இருந்தார் தோழர் அனந்தன். அவருக்கு 'பாஸ்போர்ட்' தரமறுத்துவிட்டது இந்திய சர்க்கார். இதேபோல நெல்லூர் மாவட்டத்திலிருந்து செல்லவிருந்த பி. சி. ரேட்டிக்கும் அனுமதிதரவில்லை.

டில்லியின் இந்த சர்வாதிகார வெறியை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். மனித உரிமையைத் தடைசெய்யும் இந்த "வெறி" ஏன் ஏற்படவேண்டும், டில்லிக்கு! அவர் ஒரு கம்யூனிஸ்டு என்பதுதான் காரணமா? 'ஆம்' என்றால், நடுநிலைக் கொள்கை வகிப்பதாகப் பேசுகிறாரே, நேரு — எங்கே சென்றது அப்பேச்சு! நம்பியார் செல்வதால் பூகம்பமா ஏற்பட்டுவிடமுடியும்?

டில்லியின் இந்த இழி செயல், நல்லோரை வெட்கப்படவே செய்யும். ஒழிக சர்வாதிகாரம்! வளர்க மனிதஉரிமை!!

# கூறுவது, நாமல்ல!

['விகடன்' 1–4–52 இதழில் வடநாட்டு ஆதிக்கம் என்ற தலைப்பிட்டு எழுதியிருப்பது இது]

இந்தியா ஒரு நாடு என்றும், அதனை ஒரு தொகுப்பாகப் பார்க்க வேண்டும் என்றும் நம் இந்திய முதல் அமைச்சரும், காங்கிரஸ் தலைவருமான பண்டித நேரு அடிக்கடி கூறி வருகிறார். இந்திய ஒற்றுமையில் விருப்பமுள்ள யாரும் இதனை எதிர்க்கமாட்டார்கள். தென்னாடு, வடநாடு என்று வேற்றுமை காட்டுவது கூடாது என்று கூறி வருகின்றனர். ஆனால் நடைமுறையில் நடப்பதென்ன? வடநாடு, தென்னாட்டை ஆதிக்கம் புரிய விரும்புகிறது; பொருளாதாரத் துறையில் அடிமைப்படுத்த எண்ணுகிறது என்பது எளிதில் புரியக் கூடியதாகும்.

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு, இந்தியா பலவிதப் புது மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. பல முக்கியமான புதிய தொழில் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. பெரிய வியாபாரங்களை நடத்தும் ஏகபோக உரிமையுங்கூட, இந்தியர்கள் கைக்கு விடப்பட்டிருக்கிறது. இவ்வளவிலும் தென்னாட்டுக்கும், தென்னாட்டு வியாபாரிகளுக்கும் கிடைத்த பங்கை நினைக்கும்போது, இந்நாட்டு வளர்ச்சியிலும், இந்நாட்டு மக்கள் நல்வாழ்விலும் நாட்டமுள்ள யாருடைய மனமும் வருந்தாமலிருக்காது.

சான்றாக, பெரிய தொழில் நிலையங்களாகத் திறக்கப்பட்ட சிந்திரி தொழிற்சாலை, பெனிசிலின் ஆலை, டி. டி. டி. ஆலை ஆகிய எல்லாப் பெரிய தொழில் நிலையங்களும் வடக்கேதான் திறக்கப்பட்டுள்ளன. பக்ரா, ஹிராகட் முதலான மிகப் பெரிய அணைக்கட்டுகளும் அங்கேதான் கட்டப்படுகின்றன. மொத்த வியாபாரச் சலுகையும், ஏற்றுமதி, இறக்குமதிக்கான ஏகபோக உரிமையும் வடநாட்டவர்களுக்கே தரப்பட்டுள்ளன.

இந்திய தொழில் விஞ்ஞானி ஜி. டி. நாயுடு இங்கோர் பெரிய மோட்டார் தொழிற்சாலையை அமைத்துக் கொள்ளும் உரிமை கேட்டதற்கு மறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிர்லாவுக்கு அவ்வுரிமை தாராளமாகத் தரப்பட்டிருக்கிறது. இந்தியத் தொழில் விஞ்ஞானியின் மேதை இந்தியாவைப் பொதுவாகப் பார்க்கவேண்டும் என்று சொல்லுகிறவர்களால் போற்றப்படவில்லை. இதனால், தென் இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம் அளவிடற்கரியது. தென்னாட்டவரும், உலகப் புகழ் பெற்றவருமான விஞ்ஞானப் பேராசிரியர் சர். சி. வி இராமன் முதற்கொண்ட, இந்நாட்டுப் பெரு மக்கள் சரியானபடி இந்திய அரசாங்கத்தவரால் மதித்துப் போற்றப்படவில்லை.

இந்நாட்டு மந்திரி சபை காங்கிரஸ் மந்திரி சபையாக இருந்துங்கூட, இதனை மத்திய அரசாங்கம் மதிக்கவில்லை என்றும், மற்ற மாகாணங்களுக்குக் காண்பிக்கப்படும் சலுகையுங்கூட, இம்மாகாணத்துக்குத் தரப்படவில்லை என்றும் முன்னாள் முதலமைச்சர் இராமசாமி ரெட்டியார், நிதி அமைச்சர் கோபால் ரெட்டி, பிரதமக் காரியதரிசியாக இருந்த எஸ். வி. இராமமூர்த்தி, இலட்சுமணசாமி முதலியார் போன்ற பல பெருமக்கள் கூ
யிருக்கின்றனர். அரிசி சா
பிடும் வழக்கமுள்ள இந்நாட்
மக்களைக் கேவலப்படுத்தக் கூடி
முறையில், மத்திய அரசாங்
அமைச்சர் ஒருவர் பேசியிரு
கிறார். இன்னோரன்ன பிற செய
கள் எதைக் காட்டுகின்றன? இந்
யாவை ஒரு தொகுப்பாகப் பார்
வேண்டும் என்று சொல்லுகி
பெருமக்கள் இதனைத் தயவுசெய்
சிந்தித்துப்பார்க்க வேண்டும். தெ
ன்னாட்டு மக்கள்மீது இவ்வளவு அல
சியமும், அவமரியாதையும் காட்ட
பட்டும் அதனைத் திருத்திக்கொ
ளும் வழிவகைகள் செய்யாமல், கு
கியமாகாண உணர்ச்சியோடு நட
க்கக்கூடாது என்று உபதேச
செய்யமட்டும் தவறுவதில்லை. இத
இந்நாட்டு மக்கள் நலங்களைக் கா
டிக்கொடுத்து வாழும் சில அ
வருடிகளுக்கு மகிழ்ச்சியைத் த
லாம். ஆனால் இந்நாட்டு மக்களுக்
அது நன்மையை விளைக்காது.

இந்தியப் பாதுகாப்பை உத்தே
சித்தேனும் பல பெரிய தொழி
கள் இந்நாட்டில் தொடங்கப்பட்
ருக்கவேண்டும். ஆனால் அப்படி
செய்ய வடக்கே உள்ள அமைச்ச
களுக்கு மனம் வரவில்லை. அதவு
தவிர, மாகாண அரசுகளிடமிருந்
சில முக்கிய அதிகாரங்களைப் பிடு
ங்கிக்கொண்டதின் மூலமும், நல்
வருவாய் இனங்களைக் கொள்
கொண்டதன்மூலமும், இந்நாட்
அரசாங்கம் சுயேச்சையான வழி
களில் மூலதனம்போட்டுத்தொழி
களைப் பெருக்க முடியாமலு
போயிற்று. இவ்வித நிலையில் வ
வர் ஆதிக்கம் கூடாது என்று சொ
வது எவ்வகையிலும் தவறு என்
கூறமுடியாது.

---


## தலைமை நிலைய வெளியீடுகள்.

1. சட்டதிட்டங்கள் 0—2—0
2. தீர்மானங்கள் 0—1—0

புத்தகம் வேண்டும் கிளைக் கழகங்களும், கழக உறுப்பினர்களும், புத்தக விலையோடு, தபாற்செலவையும் சேர்த்து முன்பணமாக அனுப்பிப் புத்தகங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். தனிப்பட்ட புத்த வியாபாரிகளுக்கு இந்தப் புத்தகங்கள், கமிஷன் முறைப்படித் தர இயலாது. இரண்டு புத்தகங்கள் வேண் வோர் நான்கணா தபால் தலைகள் அனுப்புக.

விவரங்களுக்கு:—

திராவிட முன்னேற்றக் கழகம்.
தலைமை நிலையம் : : காஞ்சிபுரம்.


Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at 'Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.